# மாநிலங்களவையில் திருச்சி சிவா எம்.பி. பேச்சு!

9ஆம் பக்கத் தொடர்ச்சி

விளாடிமீர் லெனினும், மாக்ஸிம் கார்க்கியும். இந்த நாட்டிலே போராடிய அத்தனைk பேருக்கும் அடைக்கலம் கொடுத்தார். அவர் வளர்த்த ஒரு பெண் லட்சுமிபாய் என்பவர்தான், இந்த செண்பகராமனை மணந்து கொண்டார். இந்தக் கதை, ஆம்! இது வரலாறா? இல்லை கதை. சோக கதை, சொந்தக் கதை, ஊருக்குத் தெரியாத கதை, தெரிய வேண்டிய கதை.

ஒரு தனி மனிதன் இங்கிருந்து ஜெர்மன் நாட்டுக்குப் போய், ஒரு சர்வாதிகாரியை மிரட்டுகின்ற அளவிற்கு வாழ்ந்து, கப்பலில் ஏறி தளபதியாக வந்து, உலகத்தில இருக்கிற எல்லோருக்கும் அதைப் பரப்புகிறான். அந்த செண்பகராமனை முதன் முதலாக நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் ஜெர்மன் நாட்டில் சந்தித்த போதுதான், ‘ஜெய்ஹிந்த்’ என்ற அவருடைய அந்த முழக்கத்தை எடுத்துக் கொண்டு திரும்புகிறார் என்பதும் ஒரு வரலாறு. மெல்லக் கொல்லும் விஷம், உயிர் போய்க்கொண்டிருக்கிறது; இங்கே இருந்தால் உனக்கு ஆபத்து, வேறு நாட்டுக்குப் போ என்று சொல்கிற போது, போகிற வழியில் நாஜிக்கள் மறித்துத் தாக்குகிறார்கள். மருத்துவமனைக்குப் போகிறார், உயிர் பிரிகிறது.

உயிர் பிரிகிற நேரத்தில், ரொம்ப ரொம்ப முக்கியம், அந்த நேரத்தில் அவர் சொன்னதுதான் மிகவும் முக்கியம். “நான் இந்தியா விடுதலை பெற்று, அதனுடைய சுதந்திர நாட்டின் போர்க் கப்பலில் இந்தியாவிற்குத் திரும்பிச் செல்ல வேண்டும் என்று விரும்பினேன்; ஆனால், இப்படியே இறக்க வேண்டிய நிலை வந்துவிட்டது. என் ஆசை, விருப்பம் அது என்று சொல்லி, இறந்து போகிறார்.

**இறந்தவரின் சாம்பல்!**

இறந்து போனவருடைய சாம்பலை, மூன்று ஆண்டுகள் மட்டுமே அவரோடு வாழ்ந்த அவருடைய மனைவி லட்சுமி பாய் மேடம் காமா அவர்களால் வளர்க்கப் பட்ட அவர், அந்த அஸ்தியைக் கையிலே வைத்துக் கொண்டு இந்தியாவிற்குத் தப்பி வருகிறார். எத்தனை ஆண்டுகள் காத்திருந்தார் தெரியுமா? அவன் விரும்பியது நடக்க 32 ஆண்டுகள் காத்திருந்தார். நாடு விடுதலை அடைந்தது. என்றைக்காவது நியாயத்தை யாராவது கேட்டிருக்கிறார்களா? ஒருவருடைய சோகத்தை, வேதனையை, வேறு யாராவது உடனே புரிந்து கொள்கிறார்களா? நான் செய்தது இந்த சாதனை என்றால், அதை ஏற்றுப் பாராட்டுகிற உள்ளம் யாருக்கு? எந்த காலத்தில் இருந்திருக்கிறது? சொன்னாள், கணவனுடைய வீரத்தை, தியாகத்தை ஒவ்வொருவரிடமாகச் சென்று – யாருமே கேட்கவில்லை. தெரிந்தவர்களும் கேட்க வில்லை, தெரியாதவர்களும் கேட்க வில்லை. ஆனால், அந்தப் பெண்மணி, அந்தக் கலசத்தை வைத்துக் காத்துக் கொண்டிருந்தார்.

திருமதி இந்திராகாந்தி அம்மையார், பிரதமராக ஆனவுடன், அவருக்கு எப்படியோ அந்தச் செய்தி வந்து, அதன் மூலமாக அந்த அம்மையார் அவருடைய தியாகத்தைப் பாராட்டுகின்ற அளவிற்கு அய்ன்எஸ் டில்லி என்கிற கப்பலில், மும்பையிலிருந்து, திருவனந்தபுரத்திற்கு அவருடைய அந்த அஸ்தியை அனுப்பி, கரமனை ஆற்றிலே கரைக்கச் செய்த கடமையை அவர் ஏற்று செய்தார். இது காங்கிரஸ் கட்சி, இது இந்திரா காந்தி அம்மையார் ஒன்றுமில்லை, எது இல்லை என்பது அல்ல; ஒரு மிகப்பெரிய தியாகி, நீண்ட நெடுங்காலம் பாராட்டப்பட்டது எப்பொழுது? அங்கீகாரம் கிடைத்தது எப்பொழுது? இப்போது கேட்கிறேன். மீண்டும் நான், என் தம்பியைக் கேட்கிறேன். செண்பகராமனை இவராவது அறிவாரா? அவன் தமிழன், நேதாஜிக்கு முன்னோடி! ‘ஜெய்ஹிந்த்’ என்ற முழக்கத்தை முன்னால் வைத்தவன். அவனுடைய அந்த வீரதீர செயல்! எம்-10 கப்பல் வந்து ஆற்றிய அந்த மிகப்பெரிய செயல்! தளபதியாக இருந்தது! ஹிட்லரே மிரட்டியது! ஹிட்லரிடமே மன்னிப்புக் கடிதம் எழுதி வாங்கிய ஒருவனுடைய பெயர், இந்திய நாட்டு விடுதலைப் போராட்ட வரலாற்றில் இல்லை. அதைத் தான் சொல்கிறேன்; வரலாறு மாற்றி எழுதப் பட்டது; மறைத்து எழுதப்பட்டது; மறந்து போகவில்லை, மறைத்து எழுதப் பட்டது. மாற்றி எழுத வேண்டும் இதையெல்லாம். நான் திருத்தி எழுதுங்கள் என்று சொல்லவில்லை; திருத்தி எழுதுங்கள்.

**திராவிடம் தான் எங்கள் தத்துவம்!**

இனியாவது, இனியாவது எல்லாவற்றிற்கும் ஒரு சாயத்தைப் பூசுவது; எல்லாவற்றிற்கும் ஒருவர் உரிமை கொண்டாடுவது என்பதாக இல்லாமல், ‘எனக்கே எல்லாம் எனக்கே எல்லாம்’ என்று சொல்வதற்கு மாறாக, இதற்கெல்லாம் ஒரு தீர்வு காணுங்கள். எல்லோரையும் ஒன்றாகக் கருதுங்கள்! நீங்கள் பேசுகிற தேசியம் உண்மை என்றால், ‘காஷ்மீரில் இருந்து கன்னியாகுமரி வரை ஒன்று’ என்று நடத்துங்கள்! எல்லோரையும் ஒன்றாக நடத்துங்கள்! எல்லா மொழிகளையும் ஒன்றாக நடத்துங்கள்! எல்லா இனத்தவருடைய தியாகத்தையும் போற்றுங்கள்! கிடையாதே! ஆனால், நாங்கள் யார்? மாநில கட்சி. விமர்சிக்கிறீர்களே, திராவிடம் பேசுகிறோம் என்று. ஆம்! திராவிடம் தான் பேசுகிறோம்; அதுதான் எங்கள் தத்துவம். ஆனால், முதல் முதலாக வ.உ.சி. இழுத்த செக்கு எங்கே இருக்கிறது என்று தேடி, அது கோவை சிறையில் இருக்கிறது என்று கண்டுபிடித்து, அதை சென்னையிலே நினைவு சின்னமாக மாற்றியது, எங்கள் தலைவர் கலைஞர் முதலமைச்சராக இருந்தபொழுது.

மருதுபாண்டியருக்கு மணிமண்டபம் அமைத்தது யார்? சிலை வைத்தது யார்? நேற்றைக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், மதுரையிலே 150 கோடி ரூபாய் செலவிலே, வேலுநாச்சியாருடைய பெயரால் ஒரு மேம்பாலம் அமைத்திருக்கிறார். இப்படிச் சொல்லிக்கொண்டே போகலாம்.

தீரன் சின்னமலை உங்களுக்குத் தெரியாது, உங்கள் பகுதியைச் சார்ந்த மாபெரும் வீரன். வீரன் சின்னமலை, அவன் சிறையிலே கைதாகி இருக்கிற போது (என் பகுதியை சார்ந்தவர் அல்ல; நம்ம பகுதியைச் சார்ந்தவர், இந்திய தேசத்தைச் சேர்ந்தவர் என்று பேரவைத் தலைவர் சொல்கிறார்)

நீங்கள் வாழ்ந்த பகுதி, வாழுகின்ற பகுதி! நீங்கள் இந்தியாவுக்கே சொந்தம் (எல்லாரும்தான் வாழ்கிறோம்; அதற்காக, அந்தப் பகுதியினர் மட்டும்தான் சொந்தம் கொண்டாட வேண்டும் என்பதுதான் தவறு என்று பேரவைத் தலைவர் சொல்கிறார்) நீங்கள் இந்தியாவுக்கே சொந்தம்! உங்களுக்குத் தெரியும் என்பதால் சொல்கிறேன்; எல்லோரும் தான் கொண்டாடுகிறோம்! ஆனால், தமிழ்நாட்டில் மட்டும் தான் கொண்டாடுகிறோம். என் ஆதங்கம் அதுதான். என் அக்கறையும், கவலையும் அதுதான். தீரன் சின்னமலையை நீங்கள் அறிவீர்கள்; நான் அறிவேன், தமிழ்நாடு அறியும். டில்லி அறியுமா? பாட்னா அறியுமா? அலகாபாத் அறியுமா? அறிய வேண்டும். அந்த தீரன் சின்னமலை சிறையில் இருந்த போது, அவனுக்குச் செருப்பு தைத்து கொடுத்த பொல்லான் என்பவன். அவன் எப்படித் தப்பிக்க வேண்டும் என்பதற்கான யோசனையை செருப்புக்குள்ளே வைத்து, அவருக்கு அனுப்பி, அதன் மூலமாக தீரன் சின்னமலே (அப்போது அமைச்சர் முருகன் குறுக்கிட்டுப் பேசுகிறார்) நான் என்ன தப்பு தப்பா பேசினேன்.

தம்பி உட்காருங்க! அய்யா அமைச்சர் உட்காருங்க!

சார் நான் நான் சொல்ல வந்தது. நான் தமிழில் பேசினேன்; தமிழில் தான் பேசவேண்டும். ஏனென்றால், தம்பியும் அதைத்தான் பேசுகிறார். அய்யா கொஞ்சம் உட்காருங்கள்.

**போரில் பல தந்திரங்கள்!**

போரில் பல தந்திரங்கள் உண்டு. செய்திகள் அனுப்புவதில் பல முறைகள் உண்டு. புறாவின் மூலமாக அனுப்புவார்கள். தூதுவனின் மூலமாக அனுப்புவார்கள். உணவுக்குள்ள ஏதாவது வைத்து அனுப்புவார்கள். அந்த அனுபவம் நிறைய பேருக்கு இருக்கும். எங்களுக்குத் தெரியும் பைக்குள்ளே எப்படி ஒரு மருத்துவர் சீட்டோடு கொண்டு போய், அடுத்தவரிடம் கொடுத்து வருவார் என்று எல்லாம் தெரியும். நாங்களும் சிறையில் நீண்ட காலம், ஒரு வருட காலம் இருந்தவன் தான். அது மாதிரி ஒரு தந்திரமாக, எல்லாம் தடை செய்யப்பட்ட காலத்தில், தீரன் சின்னமலைக்கு ரகசிய குறிப்புகளை அனுப்புவதற்கு வழியில்லாமல், செருப்புக்குள்ளே வைத்து அனுப்பிய ஒரு கமாண்டோதான் மிஸ்டர் பொல்லான். நான் குறைத்துச் சொல்லவே இல்லை; தீரன் சின்னமலை தப்பிக்க வேண்டும், அதற்காக ஒரு செய்தி அனுப்புகிறார்; எப்படி அனுப்பினால் போய்ச் சேரும் என்கிற போது, செருப்புக்குள்ளே வைத்து அனுப்புகிறார். அவ்வளவுதான்! ஏன் நீங்கள் போய் அதைத் தவறாக எடுத்துக் கொள்கிறீர்கள்.

நான் வரலாற்றை அப்படியே சொல்கிறேன். இவ்வளவு வரலாறு சொன்னேன் அல்லவா! செண்பகராமன், அடுத்து நீங்கள் புதிதாகக் கப்பல் கடலில் மிதக்கவிடப்படுகின்ற போர்க் கப்பலுக்கு அய்என்எஸ் செண்பகராமன் என்று பெயர் வையுங்கள்; நாங்களும் சேர்ந்து பாராட்டுகிறோம்.

அவன், வெளிநாட்டிலிருந்து விடுதலைக்காக அங்கே இருக்கிறவர்களைச் சேர்த்துக் கொண்டு வந்து எவ்வளவோ பாடுபட்டு செத்துப் போனான். கடைசியில் போர்கப்பலில் வர வேண்டும் என்று விரும்பி செத்த அவன், அந்த 32 வருஷங்களாக அந்த சாம்பலை வைத்துக் கொண்டு காத்திருந்த அந்தப் பெண்மணி, அவளுடைய தியாகம், அந்த பொறுமை, இதற்கெல்லாம் நீங்கள் உண்மையிலேயே பாராட்டுகின்றீர்கள் என்றால், வெறும் பெயர் சொல்லாதீர்கள்; நடைமுறையிலே காட்டுங்கள். அடுத்த போர்க் கப்பலுக்கு நீங்கள் பெயர் வைத்தால், அமைச்சர் முருகன் அவர்களே, வணக்கம் சொல்கிறேன்! நன்றி! நானும் சொல்லுவேன்.

இதில் யாருக்கும், ஒருவருக்கா உரிமை என்று இல்லை; எங்களுக்கும். எங்களுடைய பங்கு யாருக்கும் குறைவில்லாதது. ஆனால், வரலாற்றில் பெருமளவிற்கு அது மறைக்கப்பட்டது, மறக்கப்பட்டது. நான் சொல்கிறேன், சிபிஎஸ்இ பாடத் திட்டத்தில் தயவுசெய்து நான் குறிப்பிட்ட இவர்களை எல்லாம் கொண்டு வாருங்கள். வளர்கின்ற தலைமுறைக்குச் சொல்லி கொடுங்கள். எத்தனை பேர் இந்த நாட்டின் எத்தனை மூலையிலே, பகத்சிங், உத்தம் சிங்கைப் பற்றி சொல்கிறோம். பெருமை அடைகிறோம். எத்தனையோ பேர் எவ்வளவோ செய்தார்களே, அந்த வரிசையில் இப்படியும் சில பேர் வரலாற்றிலே மறந்து போயிருக்கிறார்கள் அல்லது மறைக்கப் பட்டிருக்கிறார் அன்சங் ஹீரோஸ்; அண்ட் அன்சங் ஹீரோயின்ஸ்.

வெளிச்சத்தில் கொண்டு வர வேண்டியது உங்களுடைய கடமை, எங்களுடைய கடமை. இது கட்சி வேறுபாடு அல்ல. இது இந்த நாட்டினுடைய உணர்வு. உண்மையில் நீங்கள் இந்த வந்தே மாதரம் என்கிற 150 ஆவது ஆண்டைக் கொண்டாடுவது, அந்த உணர்வோடு நாங்களும் பங்கெடுக்கிற காரணத்தினால் தான், நாங்களும் இதிலே கலந்து கொண்டு பேசுகிறோம். உணர்ச்சிப் பூர்வமாக பேசுகிறோம். அதிலே வைக்கிற வேண்டுகோள், தெற்கே, தமிழ்நாட்டில் கர்நாடகத்தில், கேரளாவில் எல்லா பகுதியிலும் வாழ்ந்த தியாகிகளுக்கும் மரியாதை தாருங்கள். அவர்களுக்கும் அங்கீகாரம் தாருங்கள். வரலாற்றைச் சரியாக எழுதுவோம். பள்ளி பிள்ளைகளுக்கு எதிர்காலத்தில் சொல்லித் தருவோம்!

இவ்வாறு திருச்சி சிவா உரையாற்றினார்.

---

## தமிழக மக்கள் முன்னணி சார்பில் – இன்று

# ஆளுநர் பதவி ஒழிப்பு - தொடர் முழக்கப் போராட்டம்!

### தி.வேல்முருகன், கு.இராமகிருட்டிணன் – கொளத்தூர் மணி – வாலாசா வல்லவன் – பொழிலன் பங்கேற்பு!

*சென்னை, டிச.13-*

*சென்னை, சைதாப் பேட்டை, பனகல் மாளிகை அருகில் இன்று (13.12.2025) காலை 10 மணி முதல் பகல் 2 மணி வரை, ‘தமிழக மக்கள் முன்னணி’ சார்பில் ஆளுநர் பதவி ஒழிப்பு தொடர் முழக்கப் போராட்டம் நடைபெறுகிறது.*

இதில் தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் தி.வேல் முருகன், திராவிடர் விடுதலைக் கழகம் கொளத்தூர் மணி, தந்தை பெரியார் திராவிடர் கழகம் கோவை கு. இராமகிருட்டிணன், வாலாசா வல்லவன், தியாகு, வன்னியரசு (வி.சி.க.) மீ.த.பாண்டியன், பாடகர் கோவன், சாமுவேல் ராசு, மு. ரவி, வெற்றிவேல் செழியன், ஜெ. ஹாஜாகனி, வழக்கறிஞர் பானுமதி, மங்கையர் செல்வன், அஸ்கர், சீராளன், தோழர் மகேசு, செந்தில், இரமணி, அருள், கி.வே. பொொன்னையன், பழனிராசன், இரகீம், க.இரா.தமிழரசன், தேவதாசு, இளையராஜா, மதியவன் இரும்பொறை மற்றும் சின்னபத்தமிழர், ஐங்கரன், காந்தி, க.பா.சீனிவாசன், இ.இராசாமணி, அகத்தியன், பி.கே.முருகேசன், முத்தரசன், செய்யாளன், சேகர், அசுரன், தீனா, செயக் கிருட்டிணன், தம்பி மண்டேலா ஆகியோரும் அவர்கள் சார்ந்த அமைப்புகள், இயக்கத்தினர் கலந்து கொள்கின்றனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் அற்புதம்மாள், முனைவர் மா.பூங்குன்றன, ஜாக்குலின் செஞ்சி இராமச்சந்திரன், பேராசிரியர்கள் திருமாவளவன், கோச்சடை, சிவகுமார், வீ.அரசு, ப.கல்யாணி மற்றும் ஆலப்பாக்கம் முருகேசன், தடா நல்லரசன், புலவர் இரத்தினவேலன், கி.குணத்தொகையன் ஆகியோரும் பங்கேற்கின்றனர்.


இந்த ஆர்ப்பாட்டத்தை தமிழக மக்கள் முன்னணி தோழர் பொழிலன், த. செயராமன், கண. குறிஞ்சி, நிலவழகன், பாவெல், தங்க. குமரவேல், சுப்பு மகேஷ், நாகேசுவரன், சௌ.சுந்தரமூர்த்தி, ஏ.தெய்வசிகாமணி, குணசேகரன், கோப் பெருஞ்சோழன் ஆகியோர் ஒருங்கிணைக்கின்றனர்.

---

**திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்**

**துறையூர் ந.குணசீலன்**

**டிசம்பர் 13 (2015)**



இளமைக் காலம் தொட்டு கழகத்தில் தீவிரமாகப் பணியாற்றியவர்.

தந்தை பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கையுடன் இறுதிவரை வாழ்ந்தவர்.

1993ஆம் ஆண்டு முதல் திருச்சி மாவட்ட பொறுப்புக் குழு உறுப்பினராகவும், 1997ஆம் ஆண்டு முதல் திருச்சி மாவட்ட துணைச் செயலாளராகவும், 2000ஆம் ஆண்டு முதல் பெரம்பலூர் மாவட்டக் கழகச் செயலாளராகவும், 2005ஆம் ஆண்டு முதல் திருச்சி மாவட்ட துணைச் செயலாளராகவும், 2010ஆம் ஆண்டு முதல் இறுதி வரை பொதுக்குழு உறுப்பினராகவும் கழகத்தில் பதவி வகித்தவர்.

கழகம் அறிவித்த பல்வேறு அறப் போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

# வழிபாட்டிற்கான வழக்கு அல்ல – வாக்குக்காக நடத்தப்படும் மோசடி வேலை!

சங்கிகள் குடும்பம், தீபம் ஏற்றிட தலித்குடியிருப்புக்கு வருவார்களா? மருதமலைக்கு வா, சுவாமிமலைக்கு வா. திருச்செந்தூருக்கு வா என்றால் வரமாட்டார்கள். ஏன் எனில் அங்கு எல்லாம் மசூதி இல்லை. இஸ்லாமியர்கள் இல்லை. அதனால் அங்கு வர வாய்ப்பு இல்லை. இஸ்லாமியர்களை விரட்டுவதுதானே காவிப் படை வேலை.

தீபம் ஏற்றுவது என்பது கோவில் மரபு மட்டும் தானே. இதற்காக மனு போட்ட 10 பேரையே நீதிபதி ஏற்றச் சொல்வது நியாயமா? அந்த பத்து பேரும் ஆர்.எஸ்.எஸ்., பி.ஜே.பிக்காரர்கள்.

மருத்துவமனைக்கு அனுமதி கேட்டால் அனுமதி கொடுத்துவிட்டு. மனு போட்டவரே நோயாளிகளுக்கு ஆப்ரேசன் செய்து கொள்ளலாம் என்றதைப்போல். அந்த 10 பேரையே தீபம் ஏற்றிட நீதிபதி உத்திரவு. போதாக் குறைக்கு நானே பார்வையிட வருவேன் என்கிறார்.

இலங்கைக் கடற்படையில் தமிழ் மீனவர்கள் சுடப்பட்டார்கள் என்றால் நானே நேரில் ஆய்வு செய்யப்போகிறேன் என எந்த நீதிபதியாவது சென்றதுண்டா?

1996-ல் தீர்ப்பு, மசூதிக்கு 75 அடிக்கு தூரமாக உன் வழிபாடை வைத்துக்கொள் என்று தீர்ப்பு வந்தது.

2014-ல் நீதிபதி வேணுகோபால், ஆதாரம் இல்லை என சங்கிகள் மனுவை தள்ளுபடி செய்தார்.

சின்னமாற்றத்துடன் 2017-ல் வந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் கல்யாணி சுந்தரம் பவானி இருவரும் உள்ளூர் மக்கள் ஒத்துப்போகும் போது அந்த மத நல்லிணக்கத்தை ஏன் கெடுக்கவேண்டும் என்று கேட்டார்கள்.

150 ஆண்டுகால தீர்ப்பை மாற்றிட வந்த வழக்கில் ஒருவராக விசாரித்ததே தவறு.

மலையில் தீபம் ஏற்றுவதற்கான நியாயத்தை பேசாமல், கருணாநிதி குடும்பத்தை வீட்டுக்கு அனுப்பவேண்டும் என்று எச். இராஜா பேசுகிறபோதே. இது வழிபாட்டிற்கான வழக்கு அல்ல வாக்குக்காக நடத்தப்படும் மோசடி வேலை என்பது புரிகிறதா?

நீதிமன்றம் “காவிரியை திறந்து விடச் சொன்னபோது, கர்நாடக அரசு திறந்துவிடாது மவுனம் காத்ததே. C.1.S.F.. ஐ விட்டு நீதிபதி உத்தரவிட்டு தண்ணீர் திறக்கப்பட்டதா?”

நீதிமன்ற தீர்ப்புப்படி பெண்கள் சபரி மலையை வழிபட உரிமை உண்டு. சங்கிகள் பயப்படாமல் பெண்களை அழைத்துச் சென்று வழிபட்டு வருவார்களா?

நில அளவைக்கல்லில் 150 ஆண்டு காலமாக தீபத்தை ஏற்றாமல் இந்த ஆண்டு மட்டும் ஏற்ற வருவது ஏன்?

100 ஆண்டு காலமாக இந்த ஆர்.எஸ்.எஸ். சங்க் பரிவாரக் கூட்டம் சிந்திக்காத. குறுக்கு வழிச் சித்தாந்தத்தை நீதிபதி சுவாமிநாதன் சிந்தித்து செயல்பட்டு இருக்கிறார்.

இதே தீர்ப்பை ஒரு மாதம் முன்பே போட்டு இருந்தால். பாதிக்கப்பட்டவர்கள் உச்ச நீதிமன்றம் சென்று தடை வாங்கி விடுவார்கள் என்பதால் 24 மணி நேரத்துக்கு முன் நீதிபதி உத்தரவிடுகிறார்.


பெரிய திருப்பம் என்னவென்றால் ஆளுநர் ரவி, தமிழ்நாடு அரசு எழுதி தந்த உரையை படிக்காமல் வெட்டியும், சேர்த்தும் படிக்கிறார். தளபதி எழுந்து. ஆளுநர் படித்தது சபைக்குறிப்பில் ஏறாது, அது நீக்கப்படும். நாங்கள் எழுதி தந்த உரையே சபைக்குறிப்பில் ஏறும் என்று சொன்ன உடன். தேசிய கீதத்தையே அவமானம் செய்து ஓடினார் ஆளுநர் ரவி.

அதேபோல், குறுக்கு வழியில் மிரட்டிய சுவாமிநாதன் நீதிபதிக்கு தெரியாது. 144 தடை உத்தரவை போட்டு வந்த பத்துபேரையும் நொந்து போகச் செய்ததுடன், ஓடோடி ஒளிந்து கொண்டனர். அவர்களை காவல்துறை விரட்டியதை மக்கள் கைதட்டி சிரித்து வரவேற்றனர்.

“கடையை சாத்து, கடையை சாத்து” என்று இந்து முன்னணியினர் காலில் விழுந்து கதறியபோதும், கடைகள் திறந்தே இருந்தன. மக்கள் அரசுக்கு ஆதா தந்தனர்.

சுவாமிநாதன் தீர்ப்பு நடைமுறைக்கு வருமானால் நாளை சாலையில் இருக்கும் மைல் கல்லிற்கெல்லாம் பட்டை குங்குமம் பூசி விளக்கேற்றமாட்டார்கள் என்பதற்கு என்ன உத்திரவாதம். அப்படி ஏற்றினால் சாலை வழி எப்படி புரியும்.

திருக்கோவில் ஸ்தானிக்பட்டர் தனது கடிதம் வாயிலாக, அறநிலைய ஆணையருக்கு ஒரு தகவல் தந்துள்ளார். அதில் கார்த்திகை தீபத்தன்றுதான் தீபம் ஏற்றப்படும். தீபம் மூல விக்கிரகத்தின் மேலே இருக்கும் பிள்ளையார் கோவிலில் ஏற்றிவிட்டோம். மற்ற நாட்களில் தீபம் ஏற்றுவது நடைமுறைக்கு ஆபத்தானது என்று கூறினார். அதேபோல் பூஜை முடிந்துவிட்டது என பூஜாரியும் கூறிவிட்டார்.



கவிஞர்
**காசிமுத்து மாணிக்கம்**
கழக வர்த்தகர் அணிச் செயலாளர்

இதே நீதிபதி, வயலூர் முருகன் கோவிலில் பிராமணர்கள் சாப்பிட்ட எச்சில் இலையில் பிராமணர் அல்லாதோர் உருண்டு புரளவேண்டும் என மனித நாகரிகம் அற்று தீர்ப்பு கூறினார். மற்ற இரண்டு நீதிபதிகளின் மாறுபட்ட கருத்துக்களால் மனித கௌரவம் காப்பாற்றப் பட்டது.

“ராமர், ராமர்” என்று தேர்தலுக்காக முழக்கம் போட்டீர்கள். உத்திரபிரதேசம் முழுவதும் எதிரொலிக்கும் என்று கருதினீர்கள். 80 சீட்டில் இந்தியா கூட்டணி 42 சீட்டும். பா.ஜ.க.வுக்கு 38 சீட்டும்தான் வெற்றி கிடைத்தது. அயோத்தியிலேயாவது பா.ஜ.க. வென்றதா என்றால், அதுவும் இல்லை. பொது தொகுதியான அயோத்தியில் ஒரு தலித் தொண்டர் இந்தியா கூட்டணியில் நின்று வெற்றி பெற்றுவிட்டார். அயோத்தியில் பா.ஜ.க. தோல்வி அடைந்தது.

நீதிபதிகளை மிரட்டுவதும், ஆளுநர் ஆக்குவதும் வழக்கமானதால் எல்லை மீறி நீதிபதிகள் தீர்ப்பு தருகிறார்கள்.

நீதிபதிகளுக்கு “நீதி சொல்லும்” புனித வேலை மட்டும்தான். தவறான தீர்ப்பு ஆனாலும், அதை அமுல்படுத்தம் வேலை மாநில அரசுக்கே தவிர நீதிபதிக்கே கிடையாது. தடி எடுத்தவன் தண்டல்காரன் ஆக முடியாது.

கலெக்டர் மகளுக்கு ஜாதி சான்றிதழ், கிராம நிர்வாக அலுவலர்தான் தர வேண்டும். கலெக்டரே தன் மகளுக்கு ஜாதி சான்றிதழ் வழங்க முடியாது.

தான் சொன்ன தீர்ப்பை நடைமுறைப்படுத்த சி.ஐ.எஸ்.எப்பை நீதிபதி அனுப்பியிருக்க கூடாது. நீதிபதிக்கு யார் அந்த அதிகாரத்தை கொடுத்தது?

திருப்பரங்குன்றத்தில் தீபம் ஏற்றுவதும், காவடி எடுப்பதும் நமது வேலை, எச். இராஜாவும், பாண்டேவும் காவடி எடுப்பார்களா? உங்கள் தாத்தா எடுத்தாரா?

அறந்தாங்கியை அடுத்த சுப்பிரமணியபுரத்தில் எனது தாத்தா தேர் காவடி. வேல் காவடி எடுத்தார். எச். இராஜவோ, பாண்டேவோ தேர் காவடி எடுக்கவேண்டாம். நாக்கில் வேல் குத்தியிருப்பார்களா?

வைணவர்களுக்கும், சைவர்களுக்குமான சண்டையை காஞ்சிபுரத்தில் நிறுத்திவிட்டு முருகனை கும்பிட எச். இராஜா கூட்டம் வரட்டும்.

தமிழ்நாட்டில் ஒருவேளை தீபம் கூட ஏற்றாத 2500 கோவில்கள் கண்டுபிடிக்கப்பட்டு, அந்தக் கோவிலுக்கு ஆண்டுக்கு 2 லட்சம் ரூபாய் வீதம் 50 கோடி கொடுத்து. கோவிலுக்கே முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஆட்சி விளக்கேற்றுகிறது. ஆனால் சங்கிக் கூட்டம் அங்கே தீபம் ஏற்றப் போவதில்லை.

கோவில்களின் ஏழு ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பு சொத்துகளை மீட்டு கோவிலுக்கே தருவதுடன். அர்ச்சகர்களுக்கு மாத ஊதியம், அர்ச்சகர்களின் குழந்தைகளுக்கு படிப்பு செலவுக்கு உதவித்தொகை செய்கிறது.

தளபதி, இந்துக்களின் கோவில்களை கவனமாக பார்த்துக் கொள்ளும் அதே நேரத்தில் மதநல்லிணக்கத்தோடு மற்ற மதத்தினரின் வழிபாட்டையும் பாதுகாத்து வருகிறார். என்பதனாலேயே ஓட்டுக்காக செய்கிறார் என கொச்சைப்படுத்தக்கூடாது.

நாகூர் தர்காவுக்கு மராட்டிய மன்னன் சந்தனக்கூடு கட்டிக் கொடுத்தாரே; ஓட்டுக்காகவா?

திருப்பத்தூர் தர்காவுக்கு மருது பாண்டியர் நன்கொடை கொடுத்தனரே; அவர்கள் என்ன தேர்தல் வாக்குக்காகவா செய்தனர்?

வைகையில் தர்காவுக்கு பாண்டிய மன்னன் 15,000 பவுன் கொடுத்ததும் வாக்கு வங்கிக்கா?

அந்த வழியில் வந்தவர்தானே தளபதி.

தளபதியும் மன்னர்கள்போல் ‘இந்து, இந்து அல்லாதோர்’ எனக்கருதாமல் ‘எல்லோரும் என் சகோதர சகோதரிகள்’ என வாழ்பவர் தளபதி. அதனால் தான் 144 தடை உத்தரவு போட்டு அமைதியை ஏற்படுத்தினார்.

தி.மு.க. அரசு முருகன் மனதை புண்படுத்தியிருந்தால், முருகனின் அறுபடை வீடுகளில் திருப்பரங்குன்றத்தை தவிர மற்ற 5 இடங்களில் தி.மு.க.தான் வென்றிருக்க முடியுமா?

திருத்தணியில் தி.மு.க. மாவட்டச் செயலாளர் எஸ். சந்திரன் எம்.எல்.ஏ.வாக வெற்றி பெற்றார். பழனியில் மாவட்ட செயலாளர் இ.பெ.செந்தில் குமார், எம்.எல்.ஏ.வாக வென்றார். சுவாமிமலையில் கூட்டணிக் கட்சியில் சகோதரர் ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. வென்றார். பழமுதிர்சோலையில் அமைச்சர் மூர்த்தி வென்றார்.

அதனால்தான் மீண்டும் சொல்வோம், நாம் மீண்டிட, மீண்டும் முடிசூடும் நாள் தளபதிக்கு நெருங்குகிறது.